## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

## O.S.No.55/2022

23.03.2023. பி. வா.சா.1 திரு. கரிகாலன்

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி. வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கு பற்றி தெரியும். வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் கண்டுள்ள 2 அயிட்ட சொத்துக்களையும் எனக்கு தெரியும். வழக்கில் வாதிகள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பற்றி தெரியும். வா.சா.ஆ.1ன் படி 1வது அயிட்ட சொத்தை வேதநாயகத்தின் தந்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அதன் பிறகு வேதநாயகம் மகன் என்ற அடிப்படையில் 1வது அயிட்ட சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் இல்லை. அவருடன் பிறந்த நான்கு பெண்கள் உள்ளார்கள். அவ்வாறு நான்கு பெண்கள் உள்ள விவரத்தை எதிர்வழக்குரையில் குறிப்பிடப்படவில்லை என்றால் தெரியாது. 2 வது அயிட்ட சொத்து பிரிவர்த்தனை ஆவணத்தின் படி வேதநாயகத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் 8 செண்டு தான் பாத்தியம். பிராது 2 அயிட்டச் சொத்துக்களும் வேதநாயகத்திற்கும், அவரது வாரிசுகளுக்கும் சொந்தம் என்றால் சரிதான். நான் 6 வாரிசுகள் உள்ளதாக கூறும் நிலையில் வா.சா.ஆ.5ன் படி நானும், 1ம் பிரதிவாதியும் வேதநாயகத்தின் சொத்தை பாகம் பிரித்துள்ளோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.5ல் பாகங்களுக்கு நான்கு எல்லைகள் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஆவணத்தை எனக்கு படிக்க தெரியவில்லை. வா.சா.ஆ.5ன் படி இருவரும் பாகம் பிரிக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 விவரம் வாதிகளுக்கு தெரியாது என்றால் சரியல்ல. எதிர்வழக்குரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் பாகம் பிரித்த விவரம் வாதிகளுக்கு தெரியும் என குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. 15.10.2021ல் நான் 1ம் பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பான வா.சா.ஆ.7 அனுப்பிள்ளோம் என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் கண்ட சொத்துக்களில் வாதிகளுக்கும் வாரிசு அடிப்படையில் பாகம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களுக்கு நான் தான் தகவல் தெரிவித்தேன். அதில் 11வது பத்தியில் குறிப்பிட்டுள்ள காந்தர்வ திருமணம்

ஊரிலுள்ளவர்களும், தந்தை சொல்லியும் தெரியும். அந்த சரோஜா, திருமணம் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் அப்போது பிறக்கவில்லை. ஊர் அறிய வேதநாயகம் பரப்பாடியை சேர்ந்த உலகம்மாளை திருமணம் செய்தார் என்றால் சரியல்ல. சேர்த்து வைத்து கொண்டார். அதில் உலகம்மாளை திருமணம் செய்து கொண்டததாகவும் குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். வேதநாயகத்திற்கும், உலகம்மாளுக்கும் பிறந்தவர்கள் வாதிகளின் தாயார் பரமேஸ்வரி, 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். வேதநாயகத்திற்கும், உலகம்மாளுக்கும் நடந்த திருமணம் தான் சட்டப்படியான திருமணம் என்றும், அவர்களுக்கு வாதிகளின் தாயார் பரமேஸ்வரியும், 1ம் பிரதிவாதி தான் சட்டப்படியான வாரிசுகள் என்றும் வேறு யாரும் வாரிசுகள் இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் 6 பேரும் தான் வாரிசுகள் ஆவோம். நீதிமன்றத்தில் அவர்கள் தான் வாரிசுகள் என வாரிசு சான்று பெற்றுள்ளார்கள் என்றால் அது ஏமாற்றி பெறப்பட்டது ஆகும். ஜெயக்காந்தி எப்போதாவது ஆலங்குளம் தருவைக்கு வந்துள்ளாரா என்றால் வந்துள்ளார். எனது தாயார் இறந்ததர்க்கு சடங்கு செய்தார். அந்த விவரத்தை பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. ஜெயக்காந்தி ஊரில் இருப்பது உண்மை. அவர் விழுப்புரம் மாவட்த்தில் அரசு மருத்துவமனையில் இறந்து விட்டார். அதற்கு முன்பு இங்கு இருந்தார். ஜெயக்காந்தி தருவைக்கு வரவில்லை என்றும், பி.வா.சா.ஆ.9 போலியான சான்று என்றால் சரியல்ல. வேதநாயகத்திற்கு 6 வாரிசுகள் என கூறும் போது நாங்கள் இருவரும் பிறப்பித்த வா.சா.ஆ.5 சட்டப்படி செல்லாது என்றால் சரியல். அதில் பாதி பாகம் வாதிகளுக்கு உள்ளது என்றால் சரியல்ல. கற்பனையாக ராணி என்ற பெண்ணை வேதநாயகம் திருமணம் செய்ததாக பொய் கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. நானும் 1ம்பிரதிவாதியும் பி.வா.சா.ஆ.1ல் மோசடியான ஆவணங்களின் படி பெயர் சேர்த்துள்ளதால் அது வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 ல் வேதநாயகம் பெயர் துலங்காது. அவர் 2002 ல் இறந்து விட்டார். பி.வா.சா.ஆ.4 அவர் காலத்திற்குரியது என்றும், அதில் அவர் பெயர் இல்லாததால் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 முதல் 4 ன் படி வேதநாயத்தின் சுய சம்பாத்திய சொத்து என்றால் சரிதான். அதில் சட்டப்படியான வாரிசுகள் அடிப்படையில்

வாதிகளுக்கும் 1ம் பிரதிவாதிக்கும் தான் அதில் பாகம் உள்ளது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி நீதிமன்றத்திற்கு வரவில்லை என்றால் தெரியாது. 3 நாட்களுக்கு முன்னர் தபசில் சொத்தில் வேலி அடைத்தேன் என்றால் சரிதான். ஆடு, மாடுகள் வரக் கூடாது என அடைத்தேன். இது நாள்வரை நான் அடைக்கவில்லை என்றால் சரியல்ல. வாதிகள் முன்னீர்பள்ளம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் கள் என்றால் சரிதான். விசாரணையில் முள்ளை எடுக்குமாறு காவல் துறையினர் கூறினார்கள் என்றால் சரிதான். வழியை எடுக்க சொன்னார்கள் எடுத்து விட்டோம். நான் முள்ளை எடுக்க முடியாது என காவல் நிலையத்தில் தெரிவித்து விட்டேன் என்றால் சரியல்ல. நான் வேதநாயகத்தின் சட்டப்படியான வாரிசு இல்லை என்றால் சரியல்ல. எனவே பிராது படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.